2014 டிசம்பர் 4]

செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

அரசு விதைப் பண்ணை

***4615— திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியிலுள்ள அரசு விதைப் பண்ணையினை மீண்டும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் மொழியின் முதல் வார்த்தை, மூவுலகம் ஒலிக்கும் புகழ் வார்த்தை அம்மா! நாங்கள் நித்தமும் வணங்குகின்ற எங்களின் குலதெய்வம் அம்மா! மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான மத்திய, மாநில அரசு விதைப் பண்ணையில் விவசாயத்திற்கு உகந்த பகுதியை உரிய முறையில் தேர்வு செய்து மீண்டும் பயன்படுத்த ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணக் காவியம், ஈடு இணையில்லா கலங்கரை விளக்கம், படை தகர்த்து பகை வெல்லும் தன்மானச் சிங்கம், மாண்புமிகு மக்களின் முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டியதன் அடிப்படையில் ஒரு குழு அமைத்து, கள ஆய்வு மேற்கொண்டு,

தேவையான இடத்தினை வனத் துறையிடமிருந்து நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் பெற்று, மீண்டும் அரசு விதைப் பண்ணை அமைக்க அரசால் ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது செங்கம் சட்டமன்றத் தொகுதி, விவசாயம் நிறைந்த பகுதி என்பதாலே அங்கு பண்ணை அமைத்தால், ஆயிரக்கணக்கான விவசாய மக்கள் பயனடைவார்கள். மற்றும் தரமான விதைகள் அம்மா அவர்கள் ஆட்சியிலே கிடைக்கின்ற காரணத்தாலே விவசாயிகள் மீண்டும் அங்கே பயனடைவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைத்துத் தருவோம் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

புதிய பேருந்து நிலையம்

***2922— திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?